**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.98/2009**

நாள்: 22.07.2026.

பெயர்: ராமசாமி (பி.வா.சா.2) த/பெ: ரெத்தினம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>...**

1) வழக்கு சொத்து அமைந்துள்ள இடம் தெரியுமா என்றால் தெரியும், எனது வீட்டிற்கு எதிரில் உள்ள வீடு தான். பிரதிவாதி வேலாயுதம் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மாமனாரின் தம்பி, 6ம் பிரதிவாதி பாலசுப்ரமணியன் வேலாயுதத்தின் மகன் ஆவார். வழக்கு சொத்து சந்து என்றால் சரிதான், அது பாலசுப்ரமணியன் சந்து ஆகும். வாதி சதாசிவம் வீட்டிற்கு மேல்புறம் தான் தாவா சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த சந்திற்கும் மேல்புறம் தான் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி சதாசிவம் அந்த சந்து வழியாக தான் அவரது தோட்டத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. சந்தை தவிர வாதிக்கு வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல, வாதி அவரது வீட்டு வழியாக தான் சென்று வருகிறார். வாதியும், வாதி குடும்பத்தினரும் அந்த சந்து வழியாக தான் தோட்டத்திற்கு சென்று வருகின்றனர் என்றால் சரியல்ல.

2) மழை பெய்யும் போது வாதி வீட்டின் மேற்கூரையிலிருந்து தாவா சந்தில் மழை நீர் விழும் என்றால் சரிதான். வாதி வீட்டின் மேற்கூரையில் தகரம் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சந்தில் பூமிக்கடியில் தண்ணீர் குழாய் உள்ளதா என்றால் உள்ளது, வாதி வீட்டின் சுவற்றை ஒட்டினார் போல் இருக்கிறது, நான் தான் அமைத்துக் கொடுத்தேன். சந்தின் உரிமை சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டு பஞ்சாயத்து நடந்ததாக ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் சந்தினை வாதி பயன்படுத்திக்கொள்ளலாம் ஆனால் அதில் அவரது உரிமையில்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், வெள்ளை அடித்தல் போன்றவற்றிற்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ளலாம். அந்த ஆவணத்தில் மேற்கூரை ஓடு, மேற்கூரை சுவர் ஆகியவற்றை பராமரிக்க பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சந்து பகுதியை வாதி பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் ஆனால் அந்த சந்து பிரதிவாதிக்கு தான் உரிமை என்று அந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) பஞ்சாயத்து எப்போது நடந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பஞ்சாயத்து நடந்த சமயத்தில் சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள், அவர்கள் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை. சர்வேயர் அந்த இடத்தை அளந்தாரா என்றால் அளந்தார். சர்வேயர் அளவு கூறினாரா என்றால் கூறினார், சதாசிவத்தின் இடம் 28 அடியுடன் முடிவடைந்துவிட்டது என்றும், அதற்கு மேல் சதாசிவத்திற்கு இடம் இல்லை என்று கூறினார். சர்வேயர் அளந்த நான்கு புற அளவை குறிப்பிட்டுள்ளரா என்றால் இல்லை. ஒப்பந்தம் எழுதிய சமயத்தில் சர்வேயர் இருந்தாரா என்றால் இருந்தார். அவரிடம் ஏன் கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவர் கையெழுத்து போட மாட்டேன் என்று கூறிவிட்டார். நான் கூறுவது போல் பஞ்சாயத்து நடக்கவில்லை என்றாலும், சர்வேயர் அளக்கவில்லை என்றாலும், பி.வா.சா.ஆ.3 நானும், பிரதிவாதிகளும் சேர்ந்து ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் வாதி கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் உண்மையாக ஏற்பட்டிருந்தால் அதில் சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரும் கையெழுத்து போட்டிருப்பார்கள், உண்மையாக ஏற்படாததால் தான் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி பயன்படுத்துவதை தடுக்க பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சந்து வாதி, பிரதிவாதிகளால் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ரெ.ராமசாமி/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.